151

786

பிசுமில்லாஹிஇற்றஹுமா னிற்றஹீம்

இராமநாதபுரம் ஜில்லா, கமுதித் தாலூகா,

பூலாங்கால் கிராமம்

மைதீன் ஆண்டவர்கள் பள்ளிவாசல்

# வழிநடை

# அலங்காரம்.

இஃது

ஷையூர் பூ. சே. சமுசுக்கனி இருவுத்தரவர்கள் கு

முத்துமுகம்மது அவர்களால்

இயற்றப்பெற்று;

பூலாங்கால், மகாகனம்

க. சே. காதர் இருவுத்தரவர்கள்

பொருளுதவியால்,

விருதுநகர், ஸ்ரீமான்

பூ. மு. நாச்சியப்ப நாடாரவர்களது

உண்மைவிளக்கம் பிரஸிற்

பதிப்பித்தது.

1928. [அணா 2.

Q7: 417
N28
18112

786

பிசுமில்லாஹி இற்றஹுமா னிற்றஹீம்

இராமநாதபுரம் ஜில்லா, கமுதித் தாலூகா,

பூலாங்கால் கிராமம்

மைதீன் ஆண்டவர்கள் பள்ளிவாசல்

# வழிநடை

# அலங்காரம்.

இஃது

ஷையூர் பூ. சே. சமுசுக்கனி இறுவுத்தரவர்கள் குமாரர்

முத்துமுகம்மது அவர்களால்

இயற்றப்பெற்று;

பூலாங்கால், மகாகனம்

க. சே. காதர் இறுவுத்தரவர்கள்

பொருளுதவியால்,

விருதுநகர், ஸ்ரீமான்

பூ. மு. நாச்சியப்ப நாடாரவர்களது

உண்மைவிளக்கம் பிரஸிற்

பதிப்பித்தது.

விலை] 1928. [அணா 2.

# சாற்றுக்

இராமநாதபுரம் ஜில்லா, கமுதித் தாலூகா, பூலாங்கால் கிரா
க. சே. சேகு அப்துல்காதர் இராவுத்தர் மகன்
க. சே. அலியார்ப் புலவரவர்க ளியற்றிய
அறுசீர்கழிலடி ஆசிரிய விருத்தம்.

அருபமும் உருவ மாகி அனைத்தியா பலவா யார்க்கும்
பிரமமாய் நின்ற சோதி பெரியவன் தூதரான
மருமலர்ப் புயத்தா ரெங்கள் முகம்மது நபியுல லாதும்
திருமல ரடியைப் போற்றி செந்தமிழ் பனுவல் செய்தான்.

---

இதுவுமது.

சித்திரத்தன் ஒளிசிறந்த நபி பெருமான்
திருவடியைத் தினமும் வாழ்த்தி
சித்திரத்தன் ஒளிசிறந்த கனகநிதி அறமவளர்க்கும்
செல்வ மானன்
சித்திரத்தன் ஒளிசிறந்த தென்பூவை நகர்வாழ்
சமுசதீன் செல்வ
சித்திரத்தன் ஒளிசிறந்த கவிராஜ முத்தருளினன்
சிறக்க மாதோ.

---

இராமநாதபுரம் சமஸ்தானம், சாயல்குடித் தாலூகா பெருநாழி
வெ. கந்தசாமிப் புலவரவர்க ளியற்றிய
எண் சீரடி விருத்தம்.

நத்துவிரா லுக்குடைந்து மடை புக்கோடி
நளினமருங் கணிமணியின் றுலவு பண்ணை
மெத்துதிருப் பூவைநகர்க் குரிய வள்ளல்
மெய்ச்சமுசுக் கினிய மெய்யன் றுய்யன்
முத்துமுகம் மதுக்கவிஞ னுரைத்த வின்னூல்
மும்முறையின் பதத்தளைந்த முதுமெஞ் ஞானக்
கொத்துவகை யோமணப்புத் தழுதோ தேனோ
குவலயத்தோ ரெவாரும் குறிக் கொண்ணுதே.

---

இராமநாதபுரம் சமஸ்தானம், கமுதித்தாலூகா
பூலாங்கால் போஸ்டு மாஸ்டர்,
மூத்துக்கருப்ப பிள்ளையவர்க ளியற்றிய

## விருத்தம்

திருவளரும் பூலைவநகர் தீணோர்கள் குலத்துதித்த
திட சிம்மேறு
மருமலர்த்தாள் முத்துமுகம் மதுக்கவிஞன் பாடலுக்கு
மகிழ்ச்சி பொங்கத்
தருங்கவிக் கித்தரைமுழுதும் தயவுடனே சார்ந்தவர்கள்
தனமு மீய்ந்து
பெரும்பலனைப் பெற்றுநலம் பெருவோர்க ளியம்புவீர்
பிரபு தானே.

786

பிசுமில்லாஹி இற்றகுமானிற் றஹீம்.

இராமநாதபுரம் ஜில்லா, கமுதித் தாலூகா, பூலாங்கால் கிராமம்

மைதீன் ஆண்டவர்கள் பள்ளிவாசல்

# வழிநடை அலங்காரம்.

## விருத்தம்.

ஆதியா யனாதியா யரியநற் பொருளதா யனைத்துயிர்க்கும்
வேதியாய் வேதாந்த வித்ததாய் விளைவுற் றோங்கும்
சோதியாய் பள்ளியினமேல் வழிநடையைத் தொகுக்க நாவில்
நீதியா நித்தபரி சுத்தனே நீயிதற்குக் காப்புத்தானே.

## சந்தக் கும்மித் துதிகள்.

செந்நெல் விளைவு தரும்பூவை பள்ளியை
செல்லவழி நடைச்சிந்து சொல
செகமெய்த்துதி யகலாநிதி ககனப்பதிக் . காசாய்வரும்
செம்மல் முகம்மதர் தாள்போற்றி.

மன்றல் கமழும் மாவகுதைப் பதி
மன்னர் முகையதீன் தாள்போற்றி
மகிமைக்கொரு மணியாவரும் வளமைத்திகழ் கனியாமென
மாதவரைத் துதி செய்வாமே.

மன்னர் புகழ்திரு அண்ணல் இமாமவர்
நன்னய பாதத்தை நாமபணிந்து
மதியாயென துதியாயொளிர் வரமேதரும் கருணாகர
வள்ளலாம் நாதாக்கள் தாள்பணிந்து.

கன்னல் கமுகொடு சோலைகள் சூழ்தரும்
காருண்ய நாகைப் பதியினில்வாழ்
கனமுற்றிடு கருணைத்துதி இனமென்றருள் தினமெய்த்திடும்
காத்தராம் காதரொலி பாதத்தை

...மது நன்னயப் பேராம்
...பசனைப் போற்றி
வழுத்துங்கவி மண்மீதிலே வரிசையுக அருள்தந்தருள்
வண்மை செரிந்த நவமணிகாள்.

சீர்பெரும் சின்னமன் னூரணியில் வளர்திருச்
செம்மலுடை ஒலி நாயகமே
சித்தத்திடை மெத்தப்பரி சுத்தத்தி லருத்தமுற
செந்தமிழ் சந்தம் பாட்டுரைத்தேன்.

சித்தாய் பூவையில் வீற்றிருக்கும் நல்ல
சேகுமுகம்மது ஒலி நாதா
சிறியேனுரை மருகாதுனம் அருகாயிருந் தருளேபுரி
சீக்கிரம் பாட அருள்புரிவீர்

மற்றுாத செல்வம் நிறைந்தோங்கும் எந்தன்
மாதவப் பேராம் தர்மகர்த்தா
வாழுற்றிடு மறையைத்துதி சறகைத்தினம் சுருதிப்புகழ்
சாற்றிடும் தர்மவான் தாள்போற்றி.

செல்வம் நலம்பெரும் தற்பராம் கானு
சேகு முகியுயிதீன் புத்திராம்
செல்வத்திகழ் திரளாகிய கல்விக்கிரன் குடையேசெயும்
செம்மலாம காதர் ராஜேந்திர துரை.

சந்ததமுடனே யிந்த நற் புத்தகம்
தாரணி தன்னில் நிலை நாட்டும்
தருமத்தினில் தருவாகிய அருமைக்கொரு கனிகாதரு
தயாளநற் சந்ததி தான்தழைக்கும்.

## விருத்தம்.

சீரிருக்கும் ஞானத் தெளிவிருக்கும் தென் பூவை
யூரிருக்கும் வேதாந்த வுத்தமர்கள் போற்றி செய்யும்
பேரிருக்கும் பள்ளி பெருமைதனை நாம் பார்க்க
காரிருக்கும் பூங்கூந்தல் கண்மணியே நீ வாராய்.

## வழிநடை அல

(சுருளிமலைமீதில்வாழும்—

செஞ்சொ லுரைந்தகுயில்
செல்ல எழுந்திரடி தேனே பெரும்
சேகரமிருங் கலன்கள் பாகமுடன் கைவளையல்
சேர்ப்பாய் கலி தீர்ப்பாய்

சொந்தமுள்ள பந்துக்கள் யாபேர்க்கும் எந்தன்
தந்தைஅன்னை சற்குரு வானோர்க்கும் அடி
சுந்தரம தாய்ப்பயணம் தோகையேநீ சொல்லிமலர்
சூடி வழி நாடி.

பாடகம் கொலுசு தங்கத் தண்டே மிக
பத்தியா யொளிவீசும்கற் கண்டே அடி
பாகமாய் நிறைந்தமாடம் ஏகமாய் இலங்குவதைப்
பாரு தெருச் சீரு.

நானங் கமழ்ந்திடுதே முன்னே பொறு
நாகூரு ராவுத்தர் கடை பெண்ணே பெரும்
நானிலத்தோர் கேட்டுவிலை வேண்டுநற் பலசாக்கு
நயமே விற்பார் ஜெயமே.

தங்கமேநீ சற்று உட்காரு நவ
தானியங்கள் விற்பதென்ன ஜோரு மிகு.
தாமதமில்லாது இங்கு பாக்கு வெற்றிலைச் சுருட்டு
தானே வாங்கு மானே.

கண்ணியம் நிறைந்த தெரு வழியே பெரும்
கருணைகள் விளைத்தசேகு ஒலியே பள்ளி
கண்டனமே இங்குநின்று கன்னியேஉரை பாத்திகா
கருதி கொள்வாய் உறுதி.

சந்ததம் நிறைந்த சக்கா வாபா அவர்
சந்ததியா வந்தமணி மார்பா கன
சன்னதஞ்சேர் பிச்சையவர் உன்னதம்போலே அமைத்த
சொகுசே வீடு பவுசே.

நித்திலம் பிடரியற்று மினியே வல்ல
நித்தனை நிதந்துதிக்கும் தொனியே நல்ல
நீதாராம் மீராசெய்யது மாதவர் கடையில் சாமான்
வேண்டி கடை தாண்டி

மன்றல கமழும் குழ லாளே கூறு
வரிசைராவுத்தரின் வீடதுமுன் ஞலே பஞ்ச
வர்ணங்களே யேநிகர்த்த சொர்னநிறத் தூணினங்கள்
சொரூபம் மிக்க கெபூர்பம்.

காதலுக் கிசைந்த நவ மணியே சேகு
காதர்கடை கண்ணுல்பாரும் கனியே இந்தக்
காசினியுள சாக்கு பேசிவிற்பனைகள் செயும்
பெருமை மகா அருமை

தேவரடியைப் பணியுந் தேனே சித்ர
சாவடி தெரியுதுபார் மானே இதில்
தேட்டமுடனே பெரியோர் நாட்டமதாய்ப் பஞ்சாயங்கள்
தீர்ப்பார் ஞாயம் கோர்ப்பார்.

சன்னதமுட னமைத்த சீரு ஏக
சர்வசிலனை தொழுகும் பள்ளி பாரு என்றும்
சாசுபத முத்திபெற்ற ஈசனைவணக்கஞ் செய்யும்
தலமே சொர்க்க நலமே.

வங்காளச் சிலேட்டுலேட்டு பூட்டி பல
வயிரக்கல் குளோப்பர்களை மாட்டி எந்தன்
மங்கையேயிதின் எழில்கள் எங்கினும் ஜொலிக்கிதுபார்
மானே செழுந் தேனே.

மண்டலம் புகழ்செரியும் சோலை தன்னில்
மஞ்ஞைகள் சப்தமது மேலே ஆண்கள்
மன்னிய பேடைகளோடு எண்ணிய ராகங்களையே
பாடும் சுகம் தேடும்.

கண்டவர்களும் துதிக்கும் சாலே மகா
கந்தங்களையே யுகுக்கும் வேலே புள்ளி
வண்டுக ளிதிலிருந்து கொண்டே ழிசைபாடுவது
மணியே எந்தன் கனியே.

## விருத்தம் மணராமேல் துதி.

கத்துகடல் சூழிலங்கை தன்னில் மேவி
கணிதமுறும் நாட்டாமை தனம்பெற் ஞேங்கி
எத்திசையும் புகழுறுந் தென் பூவை வாழும்
எந்தலாம் சமுசுதீன் ஏற்றினர் போற்றினரே.

(காட்சி கண்காட்சியே—என்ற மெட்டு. தாளம் - ஆதி.)

பல்லவி.

பார்க்கப் பல் ஜோக்கே
பள்ளி மணாா வின்பம் (பா)

அநுபல்லவி.

பாடி இதின் சிறப்பு
நோடி எழி லிசைப்பு (பா)

சரணங்கள்.

பத்தி பத்தியால் வாணங்கள் பதித்து நல்ல
பளிங்கிவரிக் கற்கள் அங்கு விரித்து
நித்திலச் சுண்ணங் களை கொளித்து ரூல்
நோாக காங்குரெட்டு தரித்து
நீணிலத்தில் ஒளியே நித்தர் கண்கள் விழியே
மாணிலத்தோர் சொலியே மகிமையான வழியே (பா)

நாற்றிசையும் செங்கல்களை உயர்வாய் பல
நாகரீக மாய்ச் சுவரை விரிவாய்
நான்கு மூலையும் அமைத்து பரிவாய் இதை
நல்ல விதமாகச் செய்த உருவாய்
நாகமுயர்ச் சிகரம் நற்காந்திகள் பகரம்
மேகமடை உயரம் மேன்மைதரும் விபரம் (பார்

சுற்றிலும் சுண்ணாம்பு களால் தேற்றி பலர்
சுந்தரஞ் சேர் மதில்களைப் போற்றி
நற்றிய நாக்களங்கு ஊற்றி லண்டன்
நற்பெரும் கண்ணாடிகளை எற்றி
நாற்றிசைக்கும் தீபம் நன்மையான ரோபம்
போற்றுவோர்கள் லாபம் போகும் போகும் பாபம் (பா

நாகரீகக் கொத்தர்களை வருத்தி வைர
நற்பெரும் கற்கள் அங்கு பொருத்தி
கர்த்தனை நிதம் தொழுக விருத்தி இந்த
கட்டடம் தன்னைச் சீர் திருத்தி
காசினிக்கோர் கொத்தன் கமுதி வளர்ப் பத்தன்
காட்சி புகழ் வித்தன் காருண்ணிய சித்தன்

அன்னமே யிதையமைத்த தோது பார்க்க
ஆகா யிதற்கிணை செல்லாது
வண்ணம் நிகர் மதியம் ஈது இளம்
வஞ்சியே பாருமிப் போது
வானவர்கள் துதியே வாழ்த்துவர்கள் கெதியே
மேன்மை தரும் பதியே மேலவனின் விதியே (பா

கண்ணே யிதற்கிசைத்த அழகும் பெரும்
ககனத் தமரர் மனம் பழகும்
வண்ண வுலகங்க ளெல்லாம் புகழும் இது
வாகாக ஐந்தொகுத்தும் தொழுகும்
வர்ணித்த சிங்காரம் வல்லோன் உபகாரம்
எல்லாத்துயர் தூரம் ஏற்கா விபகாரம் (பார்

சித்த சித்தவர்ணங்களை நோக்கு இதை
சுத்திய சன்னல்களும் ஜோக்கு
மெத்தவயிரத் தினக்கிரி போக்கு பெரு
மேலவன் நமக்குச் செய்த தாக்கு
மேன்மையான சிறப்பு வேண்டினோர்கள் உவப்பு
பண்புகளின் பகர்ப்பு பகலவனின் ஒளிர்ப்பு (பார்

சுத்திமுத்து வர்ணங்களால் விசித்து தொகு
தொகுதியா கூண்டுகளை அமைத்து
எத்திசைவார்ணீஸ் தீந்தைகள் தரித்து பேஷ்
ஏகனருள் தங்கும்படி வுழைத்து
இந்த சித்திர மேலே என்கண்ணிற்கண்ட தாலே
அத்தனரு ளாலே ஆகா யிந்த வேலை (பார்

பூதலந் தனக்கே ஒரு வண்ணம் இது
பொற்கலசம் தன்னை ஒத்த கிண்ணம்
மாதவர் கழுத்திலிடும் சொர்னம் மகா
வானவர் துதிகள் கொளும் எண்ணம்
வழங்குந் தங்கக் குடமே வர்ணமொளிர்த் திடமே
களங்கமில்லா இடமே காட்சிகாண் போர்க்கடமே (பார்

காருண்ணிய நிறைந்த பெருங் கண்யர் நல்ல
கருத்த மிய்யண்ணன் குல வண்யர்
சீருறும் உமருகத்தா திண்யர் அவர்
செய்யும் தபோ பலத்தின் புண்யர்
சீலரான மணியே செல்வர் சமூஸ்கனியே
காலமெல்லாம் யினியே கத்தனருள் தொனியே (பார்

காட்சியாய் புறவினங்கள் கூடி பெறும்
கத்தனை நிதம் துதித்துப் பாடி
மாட்சிமை யுறவே ஜோடி நாடி சித்ர
மணராவில் வாழ்ந்திருக்கும் கோடி
மண்ணிலத்தில் நீதர் நன்கொடை செய்காதர்
இன்னிலத்தில் நாதர் ஈகைக்குண வேதர் (பார்க்

(சுருளிமலை மீதில்வாழும்—என்ற வர்ணம் சிந்துராகம்.)

கொஞ்சியே வழிநடந்து வாடி தெப்பக்
குளக்கரை தன்னைநன்றாய் நாடி அடி
கோமகளே விரைவில் நேமகங்கள் செய்துவைத்த
குளமே நீர் வளமே.

சுத்தியே திருச்சுவர்கள் நாட்டி பார்க்க
சொகுசாய் படித்துறைகள் பூட்டி பெரும்
சுந்தரத் தலத்தினர்கள் வந்தெந்த வேளையுலுச்செய்
தானம் வில் தினம்.

சங்குகள் வளைவுடைந்த முத்தம் சிந்தில்
தானேபிரபை பாடும் சித்தம் இதில்
சங்கையுடனிங்குநின்று மங்கையரே பாரடிநீ
சலத்தை நீர் வளத்தை

வாவியினில் தாமரைகள் சேஸ்டம் கெண்டை
வாளைகுதி போடும்விளை யாட்டம் நித்தம்
வஞ்சியே மிகைத்தெழுந்து கொஞ்சியே கரையில்வந்து
ஜொலிக்கும் முத்தம் கொலிக்கும்.

மங்கையேநீ குளத்தைப் பாராய் சுத்தி
மல்லிகை முல்லைகளல்லி சேராய் ராஜ
மன்னவர் காதர்செய்த புண்ணியநன் குடைபோல்
மணக்கும் வாசம் யிணக்கும்

தேக்கொடு பாவைதுணு திருத்தி அசோகு
சித்திரம் விட்டங்கள் தனைப் பொருத்தி யார்க்கும்
செப்பரிய மதுருசா தப்பில்லாது செய்துவைத்தார்
திடமே பள்ளிக் குடமே

தேவியே மனத்திசைந்து பாரே அறபு
தெள்ளரிய வேதங்கற்கும் சீரே மலர்த்
தேனினுக் கினியகுருன் ஆனுவத்தோ டோதுகிறார்
சீலர் வெகு பாலர்

தேவமிர் தம் போலினித்த மாதே மலர்ச்
செப்புமறை கேளடி இப் போதே நம்மன்
செய்யநபி தன்விதிபோல் அய்யமரவே நடந்தால்
ஜெயமே ஞான மயமே.

பூங்கொடி புளகிதங்கொண் டெழுந்து வலம்
புரிகள் வசிக்குந்தடம் நடந்து அடி
பொங்கிய மதகினிடை யோங்கிய தண்ணீரலைகள்
பெருகும மீன்கள் மருகும்

செங்கால் நாரைகளன்னஞ் செரிந்து மலர்
சேதாம்பலில் குடியா யிருந்து பெரும்
செல்வமுறும் பேடையுடன் நல்லவிதமாய்ப் பயிலும்
சேர்ந்து ஆசை கூர்ந்து.

மண்டுகம் பாடுவது ஏனோ தாள
மத்தியாவதி தோடிகள் தானோ நான்
மண்டலங்க ளெங்குசென்று கண்டிலனே இக்குளம்போல்
மணமே தண்ணீர்க் கனமே.

சிரேணியும் எங்கும்பல பிலவான் காணு
தீரர்ச் சமுசுகனி நலவான் சிலோன்
சீர்த்தியுறும் நாட்டாண்மைகள் பார்த்திப னருளின்மேன்மை
செருக்கும் செல்வம் பெருக்கும்.

கன்னியரே என்பிரகே வாடி குளம்
கடந்துதெரு வீதிகள் தேடி பெரும்
கத்தனை நிதமாருத சத்தியனைப் துல்லாகடை
கண்டோம் களி கொண்டோம்.

எத்திக்கும் வணிகமுறை அரசே சர்க்கரை
தித்திக்க கிறுங்கள் ஒருவீசை இதை
நேத்தியாய் காசுத்தில்வாங்கி பூர்த்தியாகப் பள்ளிமுன்போய்
நில்லு பாத்திகாவை சொல்லு.

தோகையரே சர்க்கரைகள் வழங்கி மிகு
தோரணங்கள் கட்டும்தெரு நெருங்கி பெரும்
தோச மறவேபல வாசம்கமழு மனே
சார்ந்தோம் துயர் தீர்ந்தோம்.

---

## நோண்டிச்சிந்து.

சீருலவு மக்கநகர்வாழ் நம்மள்
செய்யதிற சூலவர்கள் தான் வாழி
பேருலவும் நாவியார்கள் எங்கும்
பேர்பெற்றிலங்கு மசனுசன் வாழி
தாருலவு மலர்ப்புயஞ்சேர் ஒலி
சங்கைகள் செரிந்த அம்பியாக்கள் வாழி
ஏருலவு மெனவளர்த்த போர்
எந்தலாம் சேகுமுகம்மது வாழி
காருலவு கொடைகாத்தார் நாட்டாண்மை
கனதிகழ்பெரும் சமுசுக்கனி வாழி
நேருலவும் இந்நூல்தனை பெரும்
நீணிலத்தில் அச்சியற்றிப் புகழ்பெருகும்
பாருலவும் சேகுமுகையதீன் பெற்ற
பாக்கியசம் பத்துமுற்ற காதர் வாழி
கூருலவும் நன்முயற்சிசெய் தயை
குணத்தில் சிறந்தஅபுபக்கரும் வாழி
மாருலவும் மணிமார்பன் நாணு
வள்ளலாம் அப்துல்ஸ்லாம் வாழ்க வாழி
வாருலவும் புவிமாந்தர் இதை
வாங்கிவாசிப்பவர்கள் கேட்போர் வாழி
வாழ்கவாழ்க வாழ்கவாழி இந்த
வையகமெலாம் செழிக்க வாழி.

வழிநடை அலங்காரம் முற்றிற்று.

---


V. V. PRESS.
நவீனநாகரீகத்
திற்கேற்ற உயர்தர
அச்சு வேலைகளும்,
ரூலிங், பைண்டிங்
வேலைகளும் செய்து
தரக்கூடும்.